செ.வெ.எண்.342/2009/செமதொஅ நாள்:10.10.2009

**<u>திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், காட்ரம்பாக்கம் ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தை திறந்து வைத்து 573 குடும்பங்களுக்கு இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.</u>**

திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், காட்ராம்பாக்கம் ஊராட்சியில் பொது விநியோக கடை கட்டடம் திறப்பு விழா மற்றும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு ரூ.2.39 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பொதுவிநியோக கடை கட்டடத்தை திறந்து வைத்து, 573 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி பேசியதாவது,

திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 58 ஊராட்சிகளில் 56 ஊராட்சிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 ஊராட்சிகளுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது. இலவச வண்ணத் தொலைக்கட்சிப் பெட்டிகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டது. திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் மாண்புமிகு முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அனைத்து வளர்ச்சி திட்டப்பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஊராட்சியில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருபெரும்புதூர் பகுதி 5 ஆண்டுகளுக்கு முன்பு எப்படியிருந்தது. தற்போது 5 ஆண்டுகளில் பல்வேறு புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு வெளிநாட்டில் உள்ளதை போல் உள்ளது. புதிய தொழிற்சாலைகளால் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மக்களின் தேவைகளை உணர்ந்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் பாடுபட்டு வருகிறார் என கூறினார்.

விழாவில் காட்ராம்பாக்கம் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.அ.மோகன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு.வனமயில் மாணிக்கம் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். காஞ்சிபுரம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.எஸ்.பன்னீர்செல்வம் தலைமையுரையாற்றினார். முடிவில் ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் திரு.ப.வீரராகவன் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் தனித்துணை ஆட்சியர் திரு.சி.முனுசாமி, வட்டாட்சியர் திரு.இரா.கந்தசாமி, வட்ட வழங்கல் அலுவலர் திரு.எஸ்.தனலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நா.சுரேஷ்குமார், திரு.பிரான்சிஸ் மைக்கேல், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.வெங்கடாச்சலம் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.